**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 23.07.2026**
**OS. No. 09/2023**
**வழக்கு சாட்சி DW.1–கோபாலன், த/பெ.ராமசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) என் தாயார் 1ம் பிரதிவாதி பாப்பாயி இந்த வழக்கில் ஆஜராகவில்லை என்றால் இல்லை. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சுமூகமான பேச்சுவார்தை உள்ளதா என்றால் உள்ளது. என் தாயாரான 1ம் பிரதிவாதி ஏன் இந்த வழக்கில் ஆஜராகமல் உள்ளார் என்றால் வயதாகி விட்டதால் ஆஜராகவில்லை. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது குறித்து முழு விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆதியில் என் தாத்தா அரபுளிகவுண்டர் என்பருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2) என் தாத்தா அரபுளிகவுண்டர் தாவா சொத்தை என் தாயாரான 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் என்ன நிபந்தனை சொல்லப்பட்டுள்ளது என்றால் எக்காலத்திலும், எந்த காரணத்திற்குகாகவும் அந்த பத்திரத்தை ரத்து செய்தால் அது செல்லாது என்று நிபந்தனை சொல்லப்பட்டுள்ளது. வேறு ஒரு நிபந்தனையும் அந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–2 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எனக்கு எல்லா விதமான சவரச்சனைகளும், பணிவிடைகளும் செய்து வரும் காரணத்தாலும், இனியும் இதுபோல் தொடர்ந்து எனக்கு எல்லாவிதமான சவரச்சனைகளும் பணிவிடைகளும் செய்வாய் என்ற நம்பிக்கையின்பேரில் இதன் அடியில் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) மேற்கண்ட பத்திரத்தை என் தாத்தா அரபுளிகவுண்டர் 27.12.1995 ல் ரத்து செய்து விட்டார் என்றால் சரிதான், நீதிமன்றம் மூலம் எனக்கு 1996 ல் தான் தெரியும், தேதி, மாதம் எனக்கு நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–3 ரத்து பத்திரத்தில் எனது குமாரத்தி பாப்பாயி என்பவர் நான் பத்திரம் எழுதி வைத்தபின் பத்திரத்தில் நான் எழுதி வைத்தப்படி எனக்கு எல்லாவித சவரச்சணைகளும் செய்து காப்பாற்றுவார் என்று நான் நினைத்தற்கு மாறாக என்னை சரிவர பாதுகாத்து வராமலும், சவரச்சனை செய்து வராமலும், மேலும் சொத்தை சரிவர பாதுகாத்து பராமரிக்காமல் வீண் விரையங்கள் செய்து வருவதாலும், நான் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் இந்த பத்திரம் மூலம் ரத்து செய்கிறேன் என்றும், அடியில் கண்ட சொத்தும் நாளது வரை என்னுடைய சுவாதீன அனுபவத்திலேயே இருந்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் 1995 லேயே எங்களிடம் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டு, தற்போது வரை எங்கள் சுவாதீனத்தில் தான் உள்ளது.

4) மேற்கண்ட ரத்து பத்திரம் செல்லாது என்று எனது தாயரான 1 ம் பிரதிவாதி ஏதேனும் நடவடிக்கை எடுத்தாரா என்றால் தனியாக நடவடிக்கை எடுக்கவில்லை, என் தாத்தா அரபுளி கவுண்டர் தாக்கல் செய்த வழக்கிலேயே நாங்கள் அந்த ரத்து பத்திரம் செல்லாது என்று தான் முறையிட்டோம். அந்த வழக்கில் என் தாயார் குறிப்பிட்டு எதிர்கோரிக்கை செய்து மேற்கண்ட ரத்து பத்திரம் செல்லாது என்று பரிகாரம் ஏதேனும் கேட்டிருந்தாரா என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ–10 வில்லங்க சான்றிதழில் 4 வது பதிவாக என் தாத்தா 27.12.1995 ல் பதிவு செய்த ரத்து பத்திரத்தின் குறிப்பில் ரத்து பத்திரம் அசல் ஆவணத்தை ரத்து செய்வதால் இந்த ஆவணம் 1 புத்தகம் 129 தொகுதி, 487, 488 பக்கங்களில் கோர்வை செய்யப்பட்டுள்ள 1995 ம் ஆண்டின் 543 எண் ஆவணத்தை ரத்து செய்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) மேற்படி விவரங்கள் தெரிந்து கொண்ட பிறகு என் தாயாரான 1 ம் பிரதிவாதி ஏதேனும் நடவடிக்கை எடுத்தாரா என்றால் என் தாயார் படிக்காததால் அவருக்கு தெரியாது. எங்கள் வழக்கறிஞர் என் தாத்தா தாக்கல் செய்த வழக்கில் எதிர்கோரிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்று எங்களிடம் ஏதேனும் தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார்.

அந்த அறிவுரையின் பேரில் நாங்கள் ஏதேனும் நடவடிக்கை எடுத்தோமா என்றால் சாட்சி தற்போது வழக்கறிஞர் அவ்வாறு அறிவுரை எதுவும் தரவில்லை என்று தெரிவிக்கிறார். என் தாத்தா வழக்கை 3 ஏக்கர் 68 செண்ட் நிலத்திற்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த சொத்து என் தாத்தா சுய சம்பாத்தியமாக 1992 ம் ஆண்டு வாங்கியது என்றால் சரிதான்.

6) மேற்படி சொத்தை பொறுத்து செட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட்ட பிறகு என் தாயரான 1ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல, எங்கள் அனுபவத்தில் தான் சொத்து உள்ளது. மேற்படி ரத்து பத்திரத்தில் என் தாத்தா தன்னுடைய சொத்து அவர் சுவாதீனத்தில் தான் உள்ளதாக தெரிவித்ததை எதிர்த்தும் நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையா என்றால் அது குறித்து எனக்கு முழுவதுமாக தெரியவில்லை. மேற்படி ரத்து பத்திரம் தற்போது வரை நடைமுறையில் தான் உள்ளது என்றால் சரியல்ல.

7) எனக்கு 2007 ம் வருடம் என் தாயாரான 1ம் பிரதிவாதி சொத்தை எழுதி வைக்கும் வரை மேற்படி சொத்தில் எனக்கு நேரடியான உரிமை எதுவும் இல்லை என்றால் சரியல்ல, அதற்கு முன்பிலிருந்தே சொத்தில் எனக்கு உரிமை இருந்தது. தாவா சொத்தின் சர்வே எண்.284/4 ஆகும், அதன் பட்டா எண் எனக்கு தெரியவில்லை. கூட்டுப்பட்டாவில் என் பெயர் 2007 லேயே வட்டாட்சியரிடம் மனு கொடுத்து சேர்த்துவிட்டேன்.

8) இந்த வழக்கை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யவேண்டும் என்று நாங்கள் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மனு உத்தரவின்பேரில் நாங்கள் எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வீடு கட்டுவதற்காக பெறப்பட்ட பி.வா.சா.ஆ–11 அனுமதியில் தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் பட்டா குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் மேற்படி பி.வா.சா.ஆ–11ல் அவ்வாறு எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

9) 2007 ம் வருடமே என்னுடைய பெயரை கூட்டுப்பட்டாவில் சேர்த்துவிட்டதாக நான் சொல்லும் நிலையில், எங்கள் வசம் சுவாதீனம் இல்லாததால் தான் சொத்து உட்பிரிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, அனைவரும் சேர்ந்து பிறகு உட்பிரிவு செய்து கொள்ளலாம் என இருந்தோம். நான் அனைவரும் என்று வாதி பழனிசாமியையும், என்னையும் சொன்னேன். அந்த சமயத்தில் நாங்கள் பழனிசாமியுடன் சுமூகமான உறவில் இருந்தோமா என்றால் பேச்சுவார்த்தையில் தான் இருந்தோம். என் தாத்தா தாக்கல் செய்த அ.வ.எண்.243/1996 வழக்கானது விசாரணை எதுவும் நடைபெறாமல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

10) என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட 3 ஏக்கர் 68 சென்ட் நிலத்தில் நாங்கள் தான் சுவாதீனத்தில் உள்ளோமா என்றால் அதில் 1 ஏக்கர் நிலத்தில் மட்டும் சுவாதீனத்தில் உள்ளோம், அதில் தற்போது நாங்கள் சோளப்பயிர் பயிரிட்டுள்ளோம். அவ்வாறு சோளப்பயிர் பயிரீடு செய்யப்பட்டுள்ளதை காட்டுவதற்கு அடங்கல் போன்ற வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தாத்தா தாக்கல் செய்த வழக்கில் இ.ம.எண். 525/1996 என்ற மனுவில் 23.12.1996 ல் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், ஏற்கனவே கொடுத்த இடைகால தடை உத்தரவை நீக்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, அதன் பின்னிட்டு 25.01.1999 ல் அந்த இடைகால மனுவே தள்ளுபடி செய்யப்பட்டது.

11) மேற்படி உத்தரவில் என் தாயாருக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம், அதை ரத்து செய்த பத்திரத்திம் எதற்காக ரத்து செய்யப்பட்டது என்ற சங்கதிகள் குறிப்பிட்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாத்தா மேற்கண்ட வழக்கை 3 ஏக்கர் 68 சென்ட் நிலம் முழுவதற்கும் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். என் தாத்தா என் தாயாருக்கு எழுதி வைத்த காலத்திலும், அதற்கு பின்னிட்ட காலத்திலும் என் தாயார் 1 ம் பிரதிவாதியுடன் என் தாத்தா இல்லை என்றால் சரியல்ல, அவருடன் தான் இருந்தார்.

12) என் தாத்தா என் தாயாருக்கு எழுதி வைத்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள இரு தரப்பினர்களின் விலாசங்களும் வெவ்வேறு என்றால் இரண்டு முகவரியான கூணாண்டிபுதூர், சிலுவைமுத்து கொட்டாய் ஒரே முகவர் தான். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 30.07.2026 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/−திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.